# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6

## மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வு – மார்ச் 2023

## அறவியலும் இந்தியப் பண்பாடும்

### விடைக் குறிப்புகள்

**மொத்த மதிப்பெண்கள்**: 90

| பகுதி - I | | |
|---|---|---|
| I | சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். | 20x1=20 |
| 1. | ஈ – டி.கே.சிதம்பரநாதனார் | 1 |
| 2. | ஆ - முல்லைக்குத் தேர் தந்தவர் | 1 |
| 3. | ஈ - சர். ஜான் மார்ஷல் | 1 |
| 4. | ஈ - (i) ம், (ii) ம் சரி | 1 |
| 5. | அ - பீமன் - கொடை | 1 |
| 6. | அ - காரைக்கால் அம்மையார் | 1 |
| 7. | அ - காந்தாரக்கலை | 1 |
| 8. | ஈ- காஞ்சிபுரம் | 1 |
| 9. | அ - ஆதி கிரந்தகம் | 1 |
| 10. | இ - மதுரை சித்திரைத் திருவிழா | 1 |
| 11. | இ - முதியவர்கள்கூறும் தீர்ப்பு எப்போதும் சரியானதாக இருக்கும் | 1 |
| 12. | ஆ - உலகியல் இன்பங்களைத் துய்க்காத வாழ்க்கை நிலை | 1 |
| 13. | ஈ- உயர்நிலை | 1 |
| 14. | ஆ - சாக்ரடீஸ் | 1 |
| 15. | இ - கூற்று சரி, காரணம் தவறு | 1 |
| 16. | ஈ- உரிமையை | 1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 17. | இ - வணிகச் செயல்பாடுகள் | 1 |
| 18. | ஈ - பணிபுரியும் நிறுவனத்துக்கு எதிராக வாதாடலாம் | 1 |
| 19. | இ - தென்னாப்பிரிக்கா | 1 |
| 20. | அ - மனித நேயம் | 1 |

| பகுதி - II | | |
|---|---|---|
| II | **ஏதேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடை தருக: வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** | 7x2=14 |
| 21. | பொன், செம்பு, ஆகிய உலோகத்தகடுகலான மீது பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களுக்கு ' பட்டயங்கள் ' என்று பெயர் | 2 |
| 22. | சிந்துவெளி கால பெண்கள் காதணி, கைவளையல், மோதிரம், காலில் காப்பு, கழுத்தில் அட்டிகை, கழுத்து மணிகள் | 2 |
| 23. | ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, வெற்றிவேற்கை, நீதிநெறி விளக்கம், அறநெறிச்சாரம் | 2 |
| 24. | காளையின் திமிலை அல்லது கொம்பைப் பிடித்து அடக்குவது<br>நாணயங்கள் அடங்கிய பையைக் காளையின் கொம்பில் கட்டி விடுவர். நாணயத்தை 'சல்லி' என்றும் கூறுவர். காளையை அடக்கி சல்லியை பெறுவதே சல்லிக்கட்டு. | 2 |
| 25. | சமண சமயத்தின் இரு பிரிவுகள்<br>1. திகம்பரர் – திசைகளை ஆடையாக அணிபவர்.<br>2. சுவேதம்பரர் - வெண்ணிற ஆடை அணிபவர். | 2 |
| 26. | 1. பெண்களைப் போற்றல்<br>2. மக்கட் பேறைக் கொண்டாடுதல்<br>3. இயற்கையை வழிபடல்<br>4. வீரத்தையும் வெற்றியையும் விரும்புதல் | 2 |
| 27. | தனி மனிதர்கள் பலர் ஒன்று கூடி வாழ்வதைச் சமுதாயம் என்கிறோம். | 2 |
| 28. | தொழில் தொடர்பான கொள்கைகளையும், பின்பற்ற வேண்டிய நடைமுறைகளையும் கூறுவது தொழில் சார் அறம் ஆகும்.<br>தனிமனித ஒழுக்கம், சட்டங்களை பின்பற்றும் முறை | 2 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | போன்றவற்றைக் குறிப்பிடுவதே தொழிற்பெயர் அறம் ஆகும். | |
| 29. | ஒரு நாட்டில் அவரவர் தங்கள் சமயத்தைப் பின்பற்றி வாழும்போது பிற சமயம் சார்ந்த மக்களின் நம்பிக்கைகளையும், உணர்வுகளையும் மதித்து, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி ஒற்றுமையுடன் வாழ்வதே சமய நல்லினக்கணம் ஆகும். | 2 |
| 30. | பகுத்தறிவும் செயல் திறனுமுள்ள ஒருவன், தன் குறிக்கோளைச் சரியானது இது என ஆராய்ந்து, இன்னது இது என வரையறை செய்து கொண்டு அதை அடைய விரும்பி சுதந்திரமாகச் செய்வது விரும்பி ஏற்றச் செயலாகும். | 2 |

| பகுதி – III | | |
|---|---|---|
| | எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. வினா எண் 40க்கு கட்டாயமாக விடை தருக. | 7x3=21 |
| 31. | 1. பேகன்<br>2. பாரி<br>3. திருமுடிக்காரி<br>4. ஆய் அண்டிரன்<br>5. நள்ளி<br>6. வல்வில் ஓரி | 3 |
| 32. | 1. பகடைக்காய், சதுரங்கம் ஆடுவது சொக்கட்டான் ஆடுவது<br>2. காளைச் சண்டை, கோழிச் சண்டை, வேட்டையாடுதல்<br>3. சிறுவர்கள் களிமண்ணில் பொம்மை செய்து விளையாடினர் | 1<br>1<br>1 |
| 33. | பசுக்களும், பார்ப்பனரும், பெண்களும், நோயுற்றவர்களும், மக்கட்பேறு இல்லாதவர்களும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விடுமாறு போர் தொடங்குவதற்கு முன்னர் அறிவுறுத்தினர்.<br>வீரம் செறிந்த போரிலும் அறநெறி காத்தவர் தமிழர் என்பதற்கு இதுவே சான்றாகும். | 1½<br>1½ |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 34. | 1. இளைஞர்கள் உடல் திறனை வெளிப்படுத்தும் விளையாட்டு இளவட்டக்கல் ஒன்றாகும்.<br>2. தான் விரும்பிய பெண்ணை மணப்பதற்காக வீரத்தை வெளிப்படுத்தும் விளையாட்டாகும்.<br>3. விளையாடும் வீரர்கள் இக்கல்லை தன் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்து நிறுத்தி பின் கீழே போட வேண்டும். அவரே வெற்றியாளராவார். | 1<br>1<br>1 |
| 35. | 1. தமிழ் மாதத்தில் ஆடி மாதம் பதினெட்டாம் நாள் ஆடிப் பெருக்கு விழா கொண்டாடப்படுகிறது.<br>2. தென்மேற்கு பருவ மழையினால் ஆடி மாதம் ஆறுகளில் புதுப்புனல் பொங்கி வரும்.<br>3. காவிரி நதி பாயும் பகுதிகளில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. உழவர்கள் இந்நன்னாளில் உழவு வேலைகளைத் துவங்கி விதை விதைப்பார்கள். | 1<br>1<br>1 |
| 36. | i. ' அறம் சாரா ' என்ற சொல்லுக்கான பொருள் மிகவும் நுண்மையனதாகும்.<br>ii. அறம் என்ற மதிப்பீட்டு வளையத்திற்குள் வராமல் அதற்கு வெளியில் நிற்கும் செயல்கள் எனப் பொருள் கொள்ள வேண்டும்.<br>iii. மதம் பிடித்த யானை வண்டியை குடை சாய்க்கும் மாடு ஆகிய செயல்கள் 'அறம் சாரா செயல்கள் ' என்ற வகைப்பாட்டிற்குள் அடக்கலாம்.<br>iv. விரும்பியேற்ற செயல்களும், பழக்க வழக்கங்களும் நடத்தை எனப்படும். | 3/4<br>3/4<br>3/4<br>3/4 |
| 37. | 1. தனிமனிதன், சமுதாயம், நாடு இம்மூன்றும் ஒன்றொடொன்று இணைந்து செயல்படுகின்றன.<br>2. மக்கள் ஒவ்வொருவரும் தம் வாழ்நிலையை அறிந்து, சமூக வாழ்வில் பங்கேற்க வேண்டும்.<br>3. சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் நலம் தரும் | 1<br>1<br>1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | காரணத்தால் ஒரு நாட்டை 'நன்னாடு' என்று அழைக்கிறோம். | |
| 38. | 1. பாதுகாப்பு உரிமை<br>2. தகவல் பெறும் உரிமை<br>3. தேர்வு செய்யும் உரிமை<br>4. இழப்பீடு பெறும் உரிமை<br>5. தூய்மையான சுற்றுச்சூழல் பெறும் உரிமை<br>6. அடிப்படை வசதிகள் பெறும் உரிமை | 3 |
| 39. | 1. கேரள மாநிலத்தில் 'வைக்கம்' என்னும் ஊரில் குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்த மக்கள் மட்டுமே வீதியில் நடப்பதற்கும் கோவில்களுக்குச் செல்லவும் உரிமை இருந்தது. | 1 |
| | 2. இதை அறிந்த தந்தை பெரியார் 'வைக்கம்' சென்று திருவிதாங்கூர் மன்னருக்கு எதிராகப் போராடி அம்மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தந்தார். | 1 |
| | 3. மன்னருக்கு எதிராகப் போராடி வெற்றி பெற்றதால் திரு.வி.க.அவர்கள் பெரியாருக்கு 'வைக்கம் வீரர்' என்றப் பட்டத்தை வழங்கினார். | 1 |
| 40. | 1. குடவோலை முறை என்பது சோழர்கால கிராம உள்ளாட்சி உறுப்பினர்கள் தேர்வு முறையாகும். | 1 |
| | 2. ஊரில் தகுதி வாய்ந்த நபர்களின் பெயரினை பனை ஓலையில் எழுதி ஒரு மண் குடத்திற்குள் இடுவர். | 1 |
| | 3. ஒரு சிறுவனை அழைத்து குடத்தினுள் இருந்து ஒவ்வொரு ஓலையாக எடுக்கச் செய்வர். எவர் பெயர் ஓலையில் வருகிறதோ அவரே உள்ளாட்சி பிரதிநிதியாக பொறுப்பேற்பர். | 1 |

www.Padasalai.Net

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 7x5=35**

| | | | | |
|---|---|---|---|---|
| 41 (a) | கடையெழு வள்ளல்கள் ஆட்சி செய்த பகுதி – வள்ளல் தன்மை | | | 5 |
| | **குறுநில மன்னர்கள்** | **ஆட்சி செய்த பகுதி** | **வள்ளல் தன்மை** | |
| | பேகன் | பழனிமலை | மயிலுக்கு போர்வை தந்தவர் | |
| | பாரி | பறம்புமலை | முல்லைக் கொடி படர்வதற்கு தம் தேரைத் தந்தவர் | |

| | | | |
|---|---|---|---|
| | திருமுடிக்காரி | மலையமாநாடு | குதிரைகளைப் பரிசாக வழங்கியவர் |
| | ஆய் அண்டிரன் | பொதியமலை | நீல நாகத்தின் உடையை இறைவனுக்குப் போர்த்தி மகிழ்ந்தவர் |
| | அதியமான் | தகடூர் | அரிய நெல்லிக் கனியை ஔவைக்குத் தந்தவர் |
| | நள்ளி | கண்டீரமலை | மலைவாழ் மக்களுக்கு அனைத்துப் பொருட்களையும் வழங்கியவர் |
| | வல்வில் ஓரி | கொல்லிமலை | யாழ் மீட்டும் பாணர்களுக்குப் பரிசு வழங்கியவர் |

| | | |
|---|---|---|
| 41 (ஆ) | **இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள விலங்கு உரிமைகள்**<br>i. அனைத்து உயிர்களிடமும் பரிவு காட்டுவது ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமையாகும்.<br>ii. தெருவில் திரியும் விலங்குகளைக் காயப்படுத்துவதும் கொல்வதும் சட்டப்படிக் குற்றமாகும்.<br>iii. எக்காரணம் கருதியும் எவ்விலங்கையும் கைவிடும் செயல் மூன்று மாத சிறைத்தண்டனைக்குரியது.<br>iv. கட்டி வைத்தோ, உணவிடாமல் வதைத்தோ குடிநீரை மறுத்தோ விலங்குகளைத் துன்புறுத்துவது தண்டத் தொகைக்கும் சிறைத் தண்டனைக்கும் உரியதாகும்.<br>v. குரங்குகளை வளர்ப்பதும், காட்சிப் பொருளாக்குவதும் தடை செய்யப்பட்டுள்ளது. வித்தை காட்டும் பொருட்டு விலங்குகளைத் துன்புறுத்தக் கூடாது.<br>vi. உயிரியல் பூங்காக்களில் குப்பைகளை வீசுவதும், விலங்குகளைச் சீண்டுதலும் உணவிடுதலும், தொந்தரவு செய்வதும் குற்றமாகும். இதற்கு மூன்றாண்டு சிறை தண்டனையும் ரூ.25000 தண்டத் தொகையும் விதிக்கப்பட்டுள்ளது.<br>**(ஏதேனும் ஐந்து மட்டும்)** | 1<br>1<br>1<br>1<br>1 |
| 42. (அ) | **<u>சிந்துவெளி மக்கள் இறந்த உடலை அடக்கம் செய்யும் முறை</u>**<br>சிந்து வெளி மக்கள் இறந்த உடலை அடக்கம் செய்வதில் மூன்று வழி முறைகளைப் பின்பற்றினர்.<br>i. முதலாவதாக முழு உடலையும் புதைப்பது. | 1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ii. இரண்டாவதாக எரிந்த உடலின் எஞ்சிய பாகங்களையும், அவர்கள் பயன்படுத்தியப் பொருட்களையும் சேர்த்து தாழிகளில் வைத்துப் புதைப்பது. இத்தாழிகள் வீடுகளிலோ அல்லது ஒரு கிலோ புதைக்கப்பட்டன.<br>iii. இறுதியாக இறந்த உடல்களை ஊருக்குப் புறத்தே திறந்த வெளியில் பறவைகளும், விலங்குகளும் உண்ணும்படி வைத்தனர். எஞ்சிய எலும்புகளை மட்டும் எடுத்து, பின் மண் தாழிகளில் வைத்து அவற்றுடன் வேறு குடுவையில் இறந்தவர் பயன்படுத்திய பொருட்களை வைத்து சேர்த்துப் புதைத்தனர்.<br>iv. அப்போது இறந்தவருக்குப் பிடித்தமான உணவுப் பொருட்களையும் சேர்த்துப் புதைத்தனர்.<br>v. இறந்தவர்களை வடக்குத் தெற்காகப் புதைக்கும் வழக்கம் சிந்து வெளிக்கும் பண்டைத் தமிழகத்திற்கும் பொதுவாக இருந்தது. | 1<br>1<br>1<br>1 |
| 42.<br>(ஆ) | **<u>தமிழர்களின் விருந்தோம்பல் பண்பு</u>**<br>i. தமக்கென எதையும் சேர்த்து வைத்துக் கொள்ளாமல், தேவையுள்ளோர் எவரோடும் தமக்குக் கிடைத்ததைப் பங்கிட்டுப் பொதுவில் வைக்கும் வாழ்வறமே விருந்தோம்பல் எனலாம்.<br>ii. தம்மைத் தேடி வந்தவரை உணவிட்டுப் பேணி மகிழ்வித்தல் என்பது ஒரு தலையாயக் கடமையாகக் கருதப்பட்டது.<br>iii. விருந்தினரின் பசியைப் போக்கத் தன் வாழ் நலனுக்காகப் பயிரிட வைத்திருந்த விதை நெல்லை உரலில் இட்டு குத்திப் பசி போக்கிய செய்தியை புறநானூறு வாயிலாக அறிய முடிகிறது.<br>iv. வறுமையுற்ற ஒருவன் முதல்நாள் தன்னிடம் வந்த விருந்தினரின் பசியைப் போக்கத் தன் வீரத்தின் அடையாளமான வாளையே விற்றுப் பசி போக்கிய நிகழ்வைப் புறநானூறு குறிப்பிடுகிறது.<br>v. தொல்குடி சமூக அமைப்பில் எத்தகைய உணவாயினும் அதனைப் பிறருடன் பகிர்ந்து உண்ணும் உயரியப் பண்பையே காணமுடிகிறது என புறநானூறு கூறுகிறது. | 1<br>1<br>1<br>1<br>1 |
| 43. | **<u>இளவட்டக்கல், உறிமரம் ஏறுதல்</u>** | |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| (அ) | i. இளவட்டக் கல் என்பது உருண்டையான பெரிய வடிவமுடையது. தான் விரும்பியப் பெண்ணை மணப்பதற்காக தன் வீரத்தை வெளிப்படுத்தும் வண்ணம் இளைஞர்கள் ஊர் பொதுவான இடத்தில் நடைபெற்ற நிகழ்வில் தன் தலைக்கு மேல் தூக்கி நிற்பர்.<br>ii. ஒரு இளைஞன் உடல் திறனோடும் வீரத்தோடும் இருப்பதை பரிசோதனை செய்யும் விளையாட்டாக இளவட்டக் கல்வி தூக்குவது அக்காலத்தில் நிகழ்ந்துள்ளது.<br>iii. ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் நடைபெறும் இவ்விளையாட்டில் வெற்றி பெறும் காளையர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.<br>iv. பட்டை உரிக்கப்பட்ட மரத்தையே உரிமரம் என்பர். இவ்வுரிமரத்தில் ஏறி விளையாடுவதே உரிமரம் ஏறுதல் என்பர். உரிய மரத்தை மட்டுமே இவ்வகைக்குப் பயன்படுத்துவர்.<br>v. பட்டை உரிக்கப்பட்ட வழுவழுப்பான இம்மரத்தில் விளக்கெண்ணெய் தடவப்பட்டு மேலும் வழுவழுவாக்கப்படும். இம்மரத்தின் உச்சியில் பரிசுப் பொருளைக் கட்டி விடுவர். உச்சியில் உள்ள பரிசுப் பொருளை மரத்தில் ஏறி எடுப்பவரே வெற்றியாளராவார்.<br>vi. உடல் திறனை ஓர் ஆண்மகன் வெளிப்படுத்தும் வீர விளையாட்டாகவே இவ்விளையாட்டு கருதப்பட்டது.<br>(ஏதேனும் ஐந்து மட்டும்) | 1<br>1<br>1<br>1<br>1 |
| 43.<br>(ஆ) | <u>**வைணவத் திருவிழாக்கள்**</u><br>i. வைகுண்ட ஏகாதசி<br>ii. திருவோணம்<br>iii. தீபாவளி } விளக்கப்பட வேண்டும்<br>iv. நவராத்திரி விழா<br>v. அம்மன் விழா | <br>1<br>1<br>1<br>1<br>1 |
| 44.<br>(அ) | <u>**தொல்குடியினர் வாழ்வில் இயற்கை வழிபாடு**</u><br>i. இயற்கையின் பேராற்றலைக் கண்ட மனிதன் அதை வணங்கத் தொடங்கினான். இடி,மின்னல், மழை அவனுக்கு அச்சமூட்டின.<br>ii. வெள்ளப் பெருக்கு, காட்டுத் தீ, நிலச்சரிவு இவைகளால் தம்மோடு | <br>1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | இருப்பவர்கள் திடீரென காணாமல் போவதைக் கண்டு அஞ்சினான். | 1 |
| | iii. இந்த அச்சமே அவனை இயற்கையை வழிபடச் செய்தது. சூரியன், சந்திரனின் சுடர்களும், நெருப்பும், வானைத் தொடும் மலைகளும் வழிபடு பொருள்களாயின. | 1 |
| | iv. இயற்கையில் கிடைத்த எல்லாவற்றையும் நன்றி உணர்வுடன் இயற்கைக்கே படையலிட்டு வணங்கினான். | 1 |
| | v. ஐம்பூதங்களினால் இவ்வுலகம் படைக்கப்பட்டது என்ற அவர்களின் பகுத்தறிவுக் கருத்துருக்களே பிற்கால சமய வளர்ச்சிக்கு அடித்தளமாயின. | 1 |
| 44. (ஆ) | i) பொங்கல் திருவிழா, உலகில் வாழும் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. தை மாதம் முதல் நாள் தைப் பொங்கல் திருவிழா கொண்டாடப்படுகிறது. | 1 |
| | ii) உழவர்கள் தங்கள் பயிர்களை நன்கு வளரச் செய்த கதிரவனுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகக் கொண்டாடப்படுகிறது. | 1 |
| | iii) புதுப்பானையில், புதுப் பச்சிரிசியினை இட்டு மஞ்சள், கரும்பு படைத்து பொங்கலிடுவர். பொங்கலை சூரிய பகவானுக்குப் படைத்து வழிபடுவர். | 1 |
| | iv) தமிழ்நாட்டில் தைப் பொங்கல் விழாவினை 'மகர சங்கராந்தி' என்பர். சூரிய பகவான் மகர ராசியில் புகும் நாளே தைப்பொங்கல் நாளாகும். | 1 |
| | v) படைத்தப் பொங்கலை தம் உற்றார், உறவினரோடு கூடி உண்பர். வித விதமான வண்ணக் கோலங்கள் இட்டு அலங்கரிப்பர். | 1 |
| | vi) தங்கள் விளை நிலங்களில் நல்ல விளைச்சல் பெருக வேண்டும் என்ற நினைப்புடன் விளை பொருட்களை இறைவனுக்கு படைத்து நன்றி கூறும் விழாவே 'பொங்கல் திருவிழா'. (ஏதேனும் ஐந்து மட்டும்) | |
| 45. (அ) | <u>சமூக அறப்பயிற்சி நிலையங்களே கல்வி நிறுவனங்கள்</u> | |
| | i. குடும்பத்துக்கு அடுத்த நிலையில் தனிமனிதனை நல்லறப் பயிற்சியில் ஈடுபடுத்துவன கல்வி நிறுவனம். இவை மூலம் | 1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ஒழுக்கமும், கல்வியும், கட்டுப்பாடும், நற்பண்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. | |
| | ii. ஒற்றுமை, அன்பு , நிதானம், பொறுமை போன்ற நற்பண்புகளை வளர்க்க கல்வி நிறுவனம் உதவுகிறது. | 1 |
| | iii. பலன் கருதாது கடமையைச் செய்ய வேண்டும் என்ற உயரிய உணர்வு, சகிப்புத் தன்மை, இன்னா செய்யாமை, வாய்மை, ஒழுக்கம், மற்றும் மனிதன் வாழும் முறைகளைப் பயிற்றுவிப்பதும் கல்வி நிறுவனங்களே. | 1 |
| | iv. சமநோக்கு, துணிவு போன்ற நல்லொழுக்கப் பண்புகளைப் பெறுவதற்குக் கல்வி நிறுவனம் வழிவகை செய்கிறது. | 1 |
| | v. வாழ்வின் பெருமைகளையும், மகிழ்ச்சியான வாழ்வதற்குரிய வழிகளையும் பயிற்றுவித்து சமுதாயத்தில் மாணவர்கள் சிறப்பதற்குக் கல்வி நிறுவனங்கள் உதவுகின்றன. | 1 |
| | vi. முன்னோர்களின் அனுபவக் கருத்துக் கருவூலங்களை எடுத்துக் காட்டி தன்னைக் காத்துக் கொள்ளவும், வாழ்க்கையை சிறப்படையச் செய்யவும் கல்வி நிறுவனமே பயிற்சியளிக்கிறது. | |
| | **(ஏதேனும் ஐந்து மட்டும்)** | |
| 45. (ஆ) | **தனி மனிதனுக்கு இருக்க வேண்டிய சமுதாய பண்புகளாக காந்தியடிகள் கூறுவன** | |
| | i. சமுதாயம் ஒரு குடும்பம் போன்றது. சமுதாய உறுப்பினர்கள் அனைவரும் குடும்ப உறுப்பினர்களே. | 1 |
| | ii. தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. | 1 |
| | iii. ஒவ்வொரு மனிதனும், ஒரு உலகளாவிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். | 1 |
| | iv. ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி வாழக் கற்க வேண்டும். | |
| | v. ஒவ்வொரு தனிமனிதனும் பிறருக்காகவும் சமுதாயத்திற்காகவும் வாழ வேண்டும். | 1 |
| | vi. பிறர் முன்னேற்றம் கண்டு பொறாமை கொள்ளக் கூடாது. | 1 |
| | **(ஏதேனும் ஐந்து மட்டும்)** | |
| 46. (அ) | **உயர் கல்வியில் ஆசிரியர்களுக்கான அறக்கோட்பாடு** | |
| | i. பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும், பேராசிரியர்கள் கல்விப் பணி சார்ந்த தம் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும். | |
| | ii. கல்விப் பணியில் ஈடுபட்டுள்ள கல்வியாளர்கள் மற்றும் | |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | மாணவர்களுக்கு உரிய நடத்தை விதிகள் வகுத்தளிக்கப்பட வேண்டும்.<br>iii. அறிவியலை வாழ்வியல் பழக்கமாக மாற்ற வேண்டும். கூர்ந்த அறிவுத்திறன் நன்னடத்தை, ஏற்றுக் கொண்ட செயல்களில் ஈடுபாடு போன்றவை அறிவியல் கல்வியினால் கிடைக்கும் நன்மைகளாகும்.<br>iv. சிந்தனையையும், செயலையும் கூர்மைப்படுத்தாத கல்வி அறம் இல்லாத அதிகாரப் போக்குள்ள மனிதர்களையே உருவாக்கும். அன்பும், பண்பும் உடைய மனிதர்களை உருவாக்க அறப் பண்புடன் கூடிய கல்வியே தேவையாகும்.<br>v. கல்வியாளர்களுக்கான கடமையும் பொறுப்பும் மிகுதி. உண்மை, நேர்மை, அமைதி, அன்பு ஆகிய பண்புகளை தாமே வளர்த்துக் கொண்டு இவர்கள் பணிபுரிய வேண்டும். | 5 |
| 46. (ஆ) | <u>**மனித நேயம்**</u><br>i. அனைத்து உயிர்கள் மீதும் பரிவு காட்ட வேண்டும்.<br>ii. மற்ற மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் பரிவு காட்டி உதவ தன்னை ஒப்பளிக்கும் உயர்ந்த உள்ளமே மனித நேயமாகும்.<br>iii. மனித நேயம் பற்றி பேசுவதை விட மனித நேயம் மிக்க உலகாக மாற்றுவதே நமது கடமையாகும்.<br>iv. பிற நாடுகளுடன் இணக்கமாக, நட்பாக நடந்து கொள்வதன் மூலம் ஆயுதப் பயன்பாடும், மனித இறப்பும் தடுக்கப்படும்.<br>v. இயற்கைப் பேரழிவுகளின் போது பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவுவதன் மூலம் மனித நேயத்தை வெளிப்படுத்தலாம்.<br>vi. பிரச்சனைகளைப் பேசி தீர்ப்பதன் மூலமாக பல சிக்கல்கள் களையப்படும். | 5 |
| 47. (அ) | <u>**தொல்குடி சமூகத்தில் மூத்தோர் செல்வமாகக் கருதப்பட்டனர்**</u><br>i. கூரிய அறிவும் முதுமையும் உடைய பெண்கள், செம்முது பெண்டிர், பெருமுது பெண்டிர், முதுவாய்ப் பெண்டிர், பேரில் பெண்டு, தொன்முது பெண்டு எனப் பற்பல அடைமொழிகளில் போற்றப்பட்டனர். | |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ii. இவர்கள் தூது செல்வோராகவும், குறி சொல்வோராகவும், விரிச்சி கேட்போராகவும், நிமித்தம் பார்ப்போராகவும், பொது நன்மை பேணுபவராகவும் விளங்கினர்.<br>iii. ஔவையார், கடையெழு வள்ளல்களுள் ஒருவரான அதியமான் அஞ்சியை பாணர் கடியின் பெருமிதத்துடன் எதிர் கொண்டார்.<br>iv. கணவரையும், தந்தையையும் போர்க்களத்தில் பறி கொடுத்த பின்னரும் அஞ்சாது போருக்கு புதல்வரை அனுப்பியவராகவும் முதுகுடி பெண்கள் அறியப்பட்டனர்.<br>v. திருமண விழாக்களை பெண்கள் தலைமை ஏற்று நடத்தியதை அகநானூறு கூறுகிறது. முதுமைப் பெண்கள் நீரும் பூவும் நிறைந்த குடத்து நீரால் மணமக்களை நீராட்டி திருமணங்களை நடத்தியுள்ளனர். | 5 |
| 47.<br>(b) | கோவலன் மேம்பட்ட பண்புடையவன்<br>i. கோவலன் பூம்புகார் நகரத்தில் பெரு வணிகக் குடும்பத்தில் பிறந்தவன். பல கலைகளைக் கற்றவன், உயர் பண்புடன் திகழ்ந்தவன்.<br>ii. தன் மகளுக்கு "மணிமேகலா" எனப் பெயரிட்டதன் மூலம் நடுக்கடலில் தவித்த தன் முன்னோர்களைக் காப்பாற்றிய தெய்வத்தை நினைவு கூர்ந்துள்ளான்.<br>iii. முதியவரை யானையிடமிருந்து காப்பாற்றிய கருணை மறவனாகவும்<br>iv. பிரிந்த கணவன் மனைவியை பெரும் பொருள் கொடுத்து இணைத்து வைத்த செல்வனாகவும்<br>v. தலைவனை இழந்து தடுமாறும் குடும்பத்தாரையும் அவர்தன் சுற்றத்தாரையும் ஆறுதல் கூறி அரவணைத்த "இல்லோர் செம்மலாகவும்" கோவலன் புகழப்படுகிறான். | 5 |

www.Padasalai.Net